Registered as a News Paper in Ceylon
P M G No. B A
59/300 of 1939,

# இந்துசாதனம்

விரோதி வருடம்
( 1889 )
ஆவணி மாதம்
28 ம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத் - சுரு] யாழ்ப்பாணம்:- கரவருஷ ஆனிமீ கஉ உ செவ்வாய்க்கிழமை (26 ஜூன் 1951) [இல். - உரு]

உ

## தோத்திரம்

இலையென் றுரை மனவஞ்சகர் இடமன்பொடு செலுமா
புலையன் றவர் புகலும்பொருள் பொருளென் றறி வேனே
கலையென் றில கருகொண் டிருள் கடிகின்ற வெணிலவே
மலையென்பது சிலைகொண் டருள் மதுராபுரி யரனே.

இ - ள்: அருகு ஒண்டு இருள் கடிகின்ற - சமீபத்தே பொருந்திய இருளை யோட்டுகின்ற, கலை என்று இலகு - ஒருகலையாக விளங்குகின்ற, வெண்நிலவே - வெண்மையாகிய பிறைமதியையும், மலை என்பது சிலை (ஆ) - மேருமலையாகிய வில்லையும், கொண்டு அருள் - (முறையே சடாமுடியிலும் திருக்கரத்திலும்) தாங்கி (முறையே சந்திரனுக்கும் தேவர்களுக்கும்) அருள்புரிந்த, மதுராபுரி அரனே - மதுரைப்பதியி லெழுந்தருளிய சிவபெருமானே, இலை என்று உரை மனவஞ்சகரிடம் - (கொடுத்தற்கு இயலுமான பொருளையும்) இல்லை என்று சொல்லும் வன்னெஞ்சக் கபடரிடத்தே, அனபோடு செலும் மா புலையன் - அன்பு கொண்டு (உறவுசெய்து) செல்லுகின்ற மிகவும் இழிந்த யான், தவர் புகலும் பொருள் - சிவஞானிகள் கூறும் தத்துவப்பொருளை, பொருள் என்று அறிவேனோ - உறுதிப் பொருள் என்று அறிந்து கைக்கொள்ள வல்லேனோ? (கைக்கொண்டு யான் ஒழுகும் வண்ணம் அருள்புரிவாயாக என்பது குறிப்பெச்சம்) எ - று.

ஒரு கலையாகிய பிறையின், ஒளி சிறியதாதலின் 'அருகு ஒண்டு இருள் கடிகின்ற நிலவு' என்றார். நிலவு: பிறைமதிக்கு ஆகுபெயர்.

'நிலவே' என்புழி ஏகாரம் எண்ணுப் பொருளில் வந்தது; அது 'சிலை' என்புழியும் கூட்டியுரைக்கப்பட்டது. தக்கனது சாபத்தால் கலைகள் எல்லாம் தேயப்பெற்று ஒரு கலையான நிலையில், சந்திரன் அதுவும் கெட்டொழியாவண்ணம் சிவபெருமானைச் சரணடைந்து வேண்ட, அவர் ஒரு கலையாகிய பிறையைத் தமது சடாமுடியிற் சூடி, அதுமுதல் சந்திரனுக்குக் கலை நாளுக்குநாள் வளரும் வண்ணம் அருள்புரிந்தார் என்னும் புராண வரலாறும், திரிபுரத்தசுரரால் வருந்திய தேவர்கள் அத்துன்பத்தை நீக்கியருளுமாறு சிவபெருமானைப் பணிந்து வேண்ட, அவர் திரிபுரங்களைச் சங்காரஞ் செய்தற்பொருட்டு மேருமலையை வில்லாகக்கொண்டு திரிபுரசங்காரத்துக்குச் சென்றார் என்னும் புராணவரலாறும்பற்றி, "வெண்ணிலவே ... ... சிலையே கொண்டு அருள் அரன்" என்றார். [ 85. ]

# சூரிய கரும்புள்ளிகளும் உலக நிகழ்ச்சிகளும்

II

## The Sun Spots And World Events

[ பிரித்தானிய வானசாஸ்திர அங்கத்தவராகிய மட்டுவில்
பிரமஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயர் ]

இப்புள்ளிகள் தோற்றுவதற்குச் சில தினங்கட்கு முன் ஆகாயம் களங்கமற்றதாகவும், சூரிய பிம்பம் இலகுவில் பார்க்கத் தக்கதாகவும், அதன் மத்திய பாகம் மிகப்பிரபையுடையதாகவும் இருக்கும். ஆனால் சூரிய பிம்பத்தின் பிரபை ஒரே தன்மையின்றிச் சில விடங்களில் அதிகபிரபையுடையதாகவும் மறுவிடங்களிற் சிறிது குறைந்துங் காணப்படும். இப்புள்ளிகள் தோற்றுவதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குமுன் அவைகள் தோற்றுமிடங்கட்கு மேலே செறிந்திருக்கும் முகில்கள் செக்கிறமுடையதாகக் காணப்படும். இப்புள்ளிகள் அதிக தூரத்திலிருப்பதால் நமது கண்ணுக்குச் சிறியனவாயிருந்தாலும், அதிகமாகத்தோற்றுங்காலங்களில் பூமியில் அதிசயிக்கத்தக்க பல விதமான நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. இப்புள்ளிகள் அதிகமாகத்தோற்றுங்காலங்களில் சூரியனிலிருந்து ஒரு "செக்கனு"க்கு 186000 மைல் வீத வேகத்துடன் செல்லும் மெல்லிய கிற ஒளி (Ultra Violet Rays) யானது பூமியை 8 நிமிஷத்தில் வந்தடைகின்றது. இவ்வித வேகத்துடன் செல்லுவதால் பவனத்தி (Atmosphere) லுள்ள மூலப்பொருள்களின் அணுக்கள் மின் அணுக்களாக (Electric Projections) மாறுகின்றன. இம் மின்னணுக்கள் காந்தசக்தியுடையனவாதலால் காந்தமூட்டப்பட்ட யந்திரங்களை அதிகஞ் சலனிக்கவும், திசைகாட்டுங் கருவிகளைத் தன்னிலை பிறழ்ந்து வேறுதிசைகளைக் காட்டவும், மின் சொற் பிரயோகத்திற்குரிய கமபிகளைத் (Wirless Telegraphy) தடுக்கவும் செய்கின்றன வெனபதையும் லிக் வேதசாலையின் அதிபர் (The Director of the Lick observatory) G. E ஹேல் (G. E. Hale) எனபவர் கண்டறிந்தார். இதுவன்றி வடதுருவ தென்துருவங்களில் அதிசயிக்கப்படத்தக்க வெளிச்சத் தோற்றுவதற்கும், பூமியிலேற்படும் சீதோஷ்ண நிலை மாறுதலுக்கும் இப்புள்ளிகளே காரணமென்பலதனிஞ்ஞானிகள் ஆராய்ந்திருக்கிறார்கள்.

## பஸ் விபத்து

1 பெண் மாண்டாள்

மாத்தளை பஸ் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெண், சென்ற வாரம், அநுராதபுரம்-தென்கடலை-கெக்கிராவை மார்க்கமாகப் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு செல்லுகையில், கெக்கிராவையிலிருந்து 10 மைல் தூரத்திலுள்ள பெரிய குளத்திற்கணித்தாக ஓடும்போது, தெரு வீதியைத் தவறிப் பள்ளத்தில் வீழ்ந்தமையினால் பிரயாணிகளுள் ஒரு பெண் உடனே மாண்டு போனாளாம்; ஊறடைந்த 7 பிரயாணிகள் அநுராதபுர ஆஸ்பத்திரி வைத்தியசாலையிற் சிகிச்சை பெறுகின்றார்களாம்; இந்த விபத்திற்குக் காரணம் குறித்த பஸின் சாரதியாகிய M. A. குரேற பென்பவன் பஸிணைச் செலுத்தும்போது நித்திரை "தூக்கியமை"யாம்.

## அவர்களைப் பழையபடி நியமித்தல் வேண்டும்

அரசாங்க உத்தியோகம் பார்க்கும் இலங்கையிந்தியரை உத்தியோகத்தினின்றும் அறவே நீக்கிவிடுவதெனப் பிறந்த கட்டளை தவறானதென இலங்கைப் பிரதமர் வெளியிட்டதற்கு, இலங்கை இந்திய மகாநாட்டுக் காரியதரிசியாகிய திரு. V. K. வெள்ளையன், பிரதமருக்கு நன்றிகூறி, அந்தப் போலிக்கட்டளையை ஆதாரமாகக்கொண்டு உத்தியோகத்தினின்றும் விலக்கப்பட்ட இலங்கையிந்தியர் சிலரைப் பழையபடி உத்தியோகத்தில் நியமித்தல் வேண்டுமெனவுங் கேட்டுள்ளாராம்;

## விவசாயிகளுக்குப் பசளை

## குறைந்த விலையில் உதவப்படுமாம்

இலங்கையில் நெற்பயிரிடுவோர் யாவருக்கும் செயற்கைப் பசளை குறைந்த விலையில் அரசாங்கத்தால் உதவப்படும். நெல்விளைவை விருத்திபண்ணும் நோக்கமாகவே அரசாங்கம் இச்சகாயத்தைப் பயிரிடுவோர்க்குச் செய்கிறது. இப்பசளையைப் பெறவிரும்புவோர் தத்தம் பகுதிகளிலுள்ளகிருஷிகப் பொருள் உற்பத்தி - விற்பனை ஐக்கிய சங்கத்திற் சேர்ந்திருப்பின், அச்சங்கம் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். சகாயமாகக் கொடுக்கப்படும் பசளையின் விலை அதன் வழக்கமான விலையிலும் நூற்றுக்கு 30வீதம் குறைக்கப்படும். கிருஷிப் பகுதியார் பலவாறாகப் பரிசோதனை செய்து மிகமலிவாய் விற்கக்கூடியதும், சமதரை, வரண்டபூமி, கீழ்மாகாணம் என்னுமிடங்களுக்குப் பொருத்தமானதுமான ஓர்வகைப் பசளையைச் செய்கின்றனர். இப்பசளையே விவசாயிகளுக்குக் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுவதாகும்.

பசளையின் விலை குறைந்து விற்கப்படுதலால் நெல்விளைவு அதிகரிக்கும் இலங்கையின் உணவுப் பொருள் நிலைமை சுயப்படுதலன்றியும், விவசாயிகள் திருத்தமான இக்காலக் கிருஷிக முறைகளைக் கைக்கொள்ளவும் ஏவப்படுவர்.

இந்தவிபரிதங்களுக்கும் அரசாங்கங்களுக்கும் பிரதானகாரணர் அரசாங்க மந்திரியாகிய திரு. குணசிங்க என்று சொல்லப்படுகிறது.

# திருக்கேதீச்சரத் தலச் சிறப்பு

திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவில் நாணரா வாஅனல் எரிஅம்பாற்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெங்களும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை அடையாவே.

— சம்பந்த சுவாமிகள்

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேல்ஒழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செங்கண்அர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே.

— சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

முன் ஒரு காலத்தில் ஆதிசேடனுடன் மாறுகொண்ட வாயுதேவனால் ஒடிக்கப்பட்ட மேரு சிகரங்கள் மூன்றனுள் ஒன்று திரிகூட சிகரம். இதுதான் இந்திரன் ஆணைப்படி விசுவகர்மாவினால் இலங்கையாக இயற்றப்பட்டது. ஏனைய இரண்டனுள் திருக்கேதீச்சரம் மகாதுவட்டாவினால் புனையப் பெற்றது. மற்றொன்று கந்தமாதன சிகரம். சேதுபுராணத்துள் விதந்து கூறப்பட்ட கந்தமாதன சிகரம் இதுவே. கைலையின் சிகரங்கள் மூன்றனுள் ஒன்று திருக்கோணமலை என்பது முன் கூறப்பட்டது. மாதுவட்டாபுரம் என்பது மாதோட்டம் என மரீஇயிற்று. பாலாவி என்பது தீர்த்தம்.

மாதோட்டத் திருக்கேதீச்சரம் என்றும் பாலாவியின் கரைமேற் கேதீச்சரம் என்றும் பதிகங்களிற் போற்றப்பட்டிருப்பது காண்க.

இத்தலவரலாறு முழுவதும் ஆசிரியர் ம. க. வே. பிள்ளைப் புலவர் இயற்றிய சந்திரமௌலீசர் சதகத்துள் கண்டுகொள்க.

சுவாமி திருநாமம்: கேதீச்சுவரர்.
அம்மை திருநாமம்: கௌரியம்பிகை.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இ ந் து சா த ன ம்

யாழ். கர ஹூ ஆனி மீ கஉ உ செவ்வாய்க்கிழமை


## இலங்கைமயமாக்கல் இப்போதல்ல

இலங்கையிற் பிறந்தார்க்கே உத்தியோகங் கொடுக்க வேண்டும், இவர்களே வியாபார சமுதாயங்களிற் கடமையாற்ற வேண்டும், இவர்களே கூலித் தொழில் பார்த்துப் பிழைக்க வேண்டும், இவர்களே இந்நாட்டிலுள்ள எவ்வகையான பிழைப்புக்களையுஞ் செய்ய வேண்டும், இந்தியா முதலிய அந்நியநாட்டிலிருந்து வருவோர்க்கு இப்படியான உத்தியோகங்கள் பிழைப்புக்கள் கொடுக்கவொண்ணாது என்ற கொள்கையும் அதற்கான முயற்சியும், இந்நாடு சுயராச்சியம் பெற்ற நாள் தொடக்கம் இங்குள்ள அதிகாரிகளிடத்திற் காணப்படுவதை எவரும் அவதானிக்கலாம்; இங்குள்ள மக்கள் பிழைப்பில்லாமல், செய்யத் தொழிலில்லாமற் கஷ்டப்படும்போது, பசியால் வருந்தும்போது இவர்களை அலட்சியஞ் செய்து, அந்நியருக்கு உத்தியோகம் முதலியவற்றைக் கொடுப்பதும் பிழைப்புக் காட்டுவதும் முறையல்ல என்பதுதான் இங்குள்ள அதிகாரிகளுடைய நோக்கம்போலும்; இப்படி நினைத்தல் ஒரு அளவிற்குப் பிழையல்ல எனலாம்.

ஆனல், இப்படி ஒரு நாடு செய்யத் துணியும்போது, மற்றை நாடுகளின் எவ்வகையான உதவியும் பெருமல் இந்த நாடு தன்னைத்தானே நடத்திக்கொள்ளக்கூடிய சௌகரியங்களுடன் ஆற்றலோடு இருக்கின்றதோ என்பதை இந்நாட்டு அதிகாரிகள் நன்கு யோசித்தல் வேண்டும்; இந்த இலங்கை ஆதியிலே தானே தன்னைக் கொண்டிழுக்கக்கூடிய நிலைமையில் ஒருவாறு இருந்ததென்பது இலங்கையின பழைய சரித்திரத்தைப் படித்தறிந்தார் அறிவர்; ஆனல் பிருத்தானியர் கைப்பட்டபின் இந்த இலங்கை தன்னிடத்திருந்த சுவதந்திரம் மெல்ல மெல்ல நீங்கிப் பரதந்திரப்படலாயிற்று; பிருத்தானியர் தம பரிபாலனகாலத்திலே இந்நாட்டுமக்களை "வேட்டுவனெடுத்த புழுப்போல" உடை நடை பாவனை வாழ்க்கைமுறை முதலிய எல்லாவற்றிலும் தம்மயமாக்கிவிட்டார்கள்; அவர்கள் அப்படிச் செய்ததமையினாற்றான், சுதந்திரம் பெற்ற பின் இந்நாட்டு மக்களிடத்து "இலங்கை மயமாக்குதல்" என்ற இந்த எண்ணமும் முயற்சியும் பிறக்கலாயின; பிருத்தானிய மயமான இலங்கை மக்கள் காலகதியிற் சகல விஷயங்களின் பொருட்டும், வாழ்க்கைக்கு இன்றியமையாதபொருள் சிலவற்றிற்றும் அந்நிய நாடுகளை எதிர் பார்க்கவேண்டிய நிலைமையிலானார்கள். ஆனதால் நினைத்தவுடனே இலங்கையர் இலங்கைமயமாவது முடியாத கருமம்; மெல்லமெல்ல இந்நாட்டு மக்கள் அப்படியாதல் முடியும்.

இனி, அரசாங்க மந்திரி குணசிங்காபோன்றவர்கள் இந்நாட்டை இலங்கை மயமாக்க வேண்டுமென்று சொல்வதும் முயற்சி செய்வதும், உண்மையில் இலங்கை மயமாக்குதற்கல்ல, சிங்கள மயமாக்குதற்கென்பது அவர்கள் சொல்வதையும செய்வதையும் உற்று அவதானிப்போர்க்கு ஒரு அளவிற்குப் புலப்படும்; இலங்கையை இலங்கை மயமாக்குவது காலகதியில் இயலுமானலும், இலங்கையைச் சிங்கள மயமாக்குதல் சாத்தியப்படுமோ என்பது ஆசங்கைக்கிடமாம்; இலங்கையிலே தொகையிற் குறைந்தவரெனினும் தமிழர் இஸ்லாமியர் இலங்கையிந்தியர் பறங்கியரென்று சில பாகுபாடுள்ள சாதியாருள்ளார்; இவர்களிருக்கும்வரையில் இலங்கை சிங்கள மயமாகவும் சுதந்திர நாடாகவும் ஏககாலத்திலேயிருத்தல் முடியாதெனலாம்; ஒன்றிற் சுதந்திரநாடாக விருக்க வரும்; இல்லையேற் சுதந்திரத்தை யிழந்த பின்பே சிங்கள நாடாக இருக்க நேருமென நாம் காத்திருக்கலாம்.

உலக இரண்டாம் யுத்தகாலத்திற் கிழக்குக் கடற் படையின் சேனுபதியாகக் கடமையாற்றிய ஸேர் ஜொவ்றே லெயிற்றன் அவுஸ்திரேலியாவிற்குப் போகும மார்க்கத்திற் சென்றவாரம் கொழும்பிலிறங்கி இலங்கைப் பிரதம தேசாதிபதியாக வுள்ள லார்ட் ஸோல்ஸ்பரியின் விருந்தினராகத் தங்கிய போது, கொழும்புத் தினசரி ஆங்கிலப் பத்திரிகை யொன்றின் நிருபர் ஸேர்.லெயிற்றனைக்கண்டு இலங்கை அரசியல் விஷயமாகச் சில வினு நிகழ்த்தியபோது, இலங்கையை இலங்கைமயமாக்கும் விஷயமாகவுஞ் சில வினு நிகழ்த்தினர்; அதற்கு லார்ட் லெயிற்றன் பின்வருமாறு விடைகூறினர்:- "இலங்கையை இலங்கையர் மயமாக்கவேண்டியது முறைதான்; ஆனல் இதற்கு அரிதப்பட்டால் சில சமயம் நன்மைக்குமாருகத் தீமையும நேரக்கூடும்; இலங்கை தனியேநின்று தன் கருமம் பார்க்குந் திறமையை இன்னமும் அடையவில்லை; இலங்கைக் கூலியாளர்கள் இந்திய கூலியாளர்களைப் போலத் திறமையுடன் வேலை செய்யத் தக்கவரல்லர்; தேக உறுதியிலும் திடகாத்திரத்திலும இ

தியர் இலங்கையரைக் காட்டிலும் மேற்பட்டவர்கள்; மேலும் இலங்கை தனக்குப் போதிய உணவுப் பொருள்களைத் தானகவே ஆக்கிக்கொள்ளும் நிலைமையை அடைய வேண்டும்; பீ. ஏ; எம். ஏ. போன்ற உயர்தரக் கல்வியை இலங்கைப் பிள்ளைகளுக்கு ஊட்டுவதைக் காட்டிலும் தொழிற் கல்வியையே அதிகமாக ஊட்டல் வேண்டும்; பேராதனையில் அமைக்கப்படும் இலங்கைச் சர்வகலாசாலைக் கட்டடத்தைப் பார்த்தேன்; மிக அழகானது; ஆனல் அக்கலாசாலையிற்கற்று உயர்தரப் பரீட்சைகளிற் சித்தியடைந்து ஆற்றொழுக்குப்போலக் கலாசாலையை விட்டு வெளிவரும் பிள்ளைகள் எல்லாருக்கும் இலங்கையரசாங்கம் உத்தியோகம் உதவ முடியுமா? ஆனதால் தொழிற் கல்வியே இலங்கை மக்களுக்கு இன்றியமையாதது" என்று கூறினர்; "இனியும் உலக யுத்தம் மூண்டால இலங்கை பகைவருடன் தனித்து நின்று யுத்தஞ் செய்யக்கூடிய நிலையை யடையவில்லை........" என்று இவ்வாறு கூறி, லார்ட்லெயிற்றன் இன்னுமொரு பெரிய உண்மையையெடுத்துரைத்தார்; "எச்சாதியாராக, எச்சமயத்தவராகச் சமயப் பற்றில்லா தொழிவரேல், உறுதியான தெய்வ நம்பிக்கையில்லாதொழிவரேல், அச்சாதியாரைக்கொண்ட நாடு ஒருபோதும் மேலான நிலையை யடையமாட்டாது" என்பதாம். லார்ட் லெயிற்றன் சொன்னவை யத்தனையும் நிசமென ஏற்றுக் கொள்ளத்தக்கன; கருமம் இப்படியிருக்க, சிங்கள அதிகாரிகளுள் ஒடுங்கிய மனப்பான்மையினராய், இலங்கையை இலங்கையர் மயமாக்கலாம் சிங்களர் மயமாக்கலாமெனவும், பௌத்த நாடாக்கலாமெனவும், சிங்களத்தையே தாய் மொழியாக்கலாமெனவும் நினைப்பதும் சொல்வதும முயற்சி செய்வதும் புத்தியீனத்தின் பாற்படுமல்லவா!

# உலகம்பலவிதக்கதை

(முற்றொடர் — 10)

"நினைற்று நீரை
வெள்ளங் கொண்டுபோகாது"

"அண்ணு, உங்களுக்கு வனசாவுக்கும் விவாகம் நிச்சயிக்கப்பட்டமை நேற்றன்றல்ல; சிறுவயதிலேயேயானது; மேலும், நீங்கள் வனசாமீதும், வனசா உங்கள்மீதும் இந்த ஞாபகத்தினல் அதிகபக்த அன்பு பாராட்டி ஒருவர்மீதொருவர் விசுவாசம்வைத்து நடந்துவந்தீர்கள்; வனசா தன்னிளமைப் பருவத்திலேயே உங்களைத் தன் அருமைக் காதலனு, தானே உங்களுக்கு வாழ்க்கைத்துணைவியென்று நிச்சயப்படுத்திக்கொண்டாள்; உங்களிருவர்க்குமிடையில் விவாகம் சில ஆண்டுகட்கு முந்திய நிகழ்ந்திருக்க வேண்டிய ஒழுங்குகளிருந்தன; நீங்கள் கல்லூரியில் விடுமுறை நாள் கிடைக்கவில்லையெனக் காரணங்காட்டிக்கொண்டுவந்தமையினற்றான் கல்யாணம் இவ்வளவு காலமாகவும் இழுபட்டுவந்தது; காலதாமசமானுலும் கமலாவும் அவள் பெற்றாரும கல்யாணம் நிச்சயமாய் விட்டதானே, மாப்பிள்ளையின் சௌகரியத்தையுத்தேசித்துக் கல்யாணத்தை நிறைவேற்றி வைக்கலாந்தானே, நினைற்ற நீரை வெள்ளம் அள்ளிக் கொண்டு போகமாட்டாதே யென்ற நம்பிக்கையோடிருந்தார்கள்; வனசாவிடம் எனக்கும் அன்புண்டு, அவள் வாழ்க்கையை நானும் விரும்பியவண்ணமிருக்கிறேன்; ஊருக்கு நான் வந்தவுடனே வனசாவின் கல்யாணப்பேச்சு எவ்வளவிலிருக்கிறதென்றறியும்படி அவள் வீட்டிற்குப் போனேன்; போனவிடத்தில், அவள் வாடிய முகத்துடனும் மெலிந்த மேனியோடும் சோர்ந்த நடையோடும் மனமுடைந்தவளாகக் காணப்பட்டாள்; "வனசா இது என்ன கோலம்? முகவாட்டமேன்? மனக்கோட்டமேன? உங்கள் விவாகவிஷயம் எவ்வளவி லிருக்கிறது" என்று நான் இதமாக வினவுதற்கிடையில், அவள கண்களிலிருந்து நீர் "பொலு பொலு"வெனச்சிந்தியது; என்முன்றானையால் அவள் கண்ணீரைத்துடைத்து, அவளை ஆற்றித்தேற்றி, வனசா, நீ கலங்கக் காரணமென்ன? என்று பரிவுடன் கேட்டேன்; அவள் சற்றுநேரம் கலங்கியபடி மௌனஞ்சாதித்திருந்து, பின் என் நெருக்கத்தினுல், உண்மையை வெளியிட்டாள்; தன்னை நீங்கள் புறக்கணித்துவிட்டீர்கள் என்று முறையிட்டாள்; அவளின் அவசத்தைக் கண்டு மனம் பொருமல், நானே அண்ணனிடம் போய் அவரை நேரிற்கண்டு எல்லாம ஒழுங்குசெய்துவருகிறேன் ஆண்டவனருளும வேண்டுமென்று வனசாவுக்குச் சமாதானஞ் சொல்லி அவளை ஒருவாறு தேற்றியிருந்துவிட்டு, என கணவருக்கும் உங்களிடம் போகும விஷயத்தைக் கடித மூலமாகத் தெரிவித்துவிட்டு இங்கே புறப்பட்டு வந்தேன், வந்த இடத்தில் இந்த விதமாக நீங்கள் சொல்லுகிறீர்கள்: அண்ணு, நீடித்தகாலமாக நிச்சயித்திருந்த ஒரு மங்கல கருமத்திற்கு மாருக, நீங்கள் இப்படி அலட்சியமாக மறுமொழி சொன்னுல், உங்களை இன்றும நம்பியிருக்கும் அந்தக் கன்னிகையின் மனம் என்னபாடுபடும்! அவள் பெற்றருள்ளம் எவ்வளவு வருந்தும்! அப் பெண்ணிடத்தும உங்களிடத்தும் மெய்யன்பு வைத்துள்ள என்னுள்ளம் எவ்வளவு வேதனைப்படும்" என்று மனம் பதைபதைப்ப வினவினுள் கமலாட்சி.

"அவளைப் போல் உத்தமி அகப்படாள், அண்ணு"

கமலா இப்படியெல்லாஞ் சொல்லவும் வினவவும் பத்மநாதன சிந்தனையோடு கூடியவனுய் யாதும் பதில் சொல்லாமற்சும்மாவிருந்தான; பின்னரும் கமலா மனம் பொருளுய், "அண்ணு, மேலும் மேலுங் கேட்கிறேன என்று குறையெண்ணுதீர்கள்; உங்களைக் கேட்பதற்கு எனக்கு உரிமை யிருப்பதனுற்றான் கேட்கிறேன்; வனசாவை வெறுக்கத்தக்கதாய், அவளிடத்தில் என்ன குற்றங் கண்டீர்கள்? அதையாயினும் எனக்குச் சொல்லலாமே! வனசா கல்வியறிவிற் குறைவா? கட்டழகிற் குறைவா? பெண்மைக்குரிய குணம் ஒழுக்கங்களிற் குறைவா? இரக்கம இன்சொல் பணிவான நடை இவைகளுக்கு அவளிடத்திற் பஞ்சமுண்டா? அடக்கமற்றவளா? கூத்துப் படக்காட்சி வீண கூட்டம் கார்னிவலெனப்படும் உண்டாட்டுக் களியாட்ட வேடிக்கை விநோதமென்னு மிவைகளைப் பார்க்க ஆசைப்பட்டு இப்படியான இடங்களுக்குப் போபவளா? கோபங்குரோதம் பொருமை கோட்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்கம்

## 2-ம் வருடாந்தக் கூட்டம்

மேற்படி கூட்டம் 17-6-51 ஞாயிற்றுக்கிழமை சன்மார்க்க போதனை ஆங்கிலவித்தியாசாலை மண்டபத்தில் பிரபல வைத்தியர் T. இராமலிங்கம் தலைமையிற்கூடிற்று. தலைவர் வைத்தியர் A. K குமாரசாமி, உபதலைவர்கள். வைத்தியர்கள். S. P. அம்பலவாணர் T. இராமலிங்கம் V. குமாரசாமி V. கனகசபை காரியதரிசி வைத்தியர் A S இராசையா, உபகாரியதரிசி வைத்தியர் S. S. ஆறுமுகம். தனாதிகாரி வைத்தியர் G. கந்தையா, உப தனாதிகாரி வைத்தியர் C. பொன்னம்பலம் முதலிய உத்தியோக அங்கத்தவர்களும் நிர்வாக சபை அங்கத்தவர்கள் வைத்தியர்களாகவுள்ள இருபத்துநான்கு பேரும் தெரிவுசெய்யப் பெற்றனர். கணக்குப் பரிசோதகர்கள், திருவாளர்கள் S. P. கந்தையா R. C. மன்மதராயன், வைத்தியர்கள் M. குருசாமி T. இராசரத்தினம்.

தீர்மானங்கள்:—

1. யாழ்ப்பாணத்தில் திறவத் தீர்மானித்திருக்கும் சுதேச வைத்திய கலாசாலையையும் விரைவில் திறவி அரசாங்கமே நடத்துதல் வேண்டும்.

2. பரந்தனில் மூலிகைத் தோட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 100 ஏக்கர் நிலத்திலும் சுதேச வைத்திய அதிகார சபை ஒரு மூலிகைத் தோட்டத்தை விரைவில் நிறுவி அரசாங்கமே நடத்த வேண்டும்.

3. சித்த ஆயுள்வேத வைத்தியர்களுக்கு இச்சங்கமே பிரதிநிதித்துவம் வகிப்பதால் இனிமேற் தெரிவு செய்யப்போகும் சுதேச வைத்திய அதிகாரசபையிலே இச்சங்கப் பிரதிநிதிகளாய் மூவரையாவது அரசாங்கம நியமிக்க வேண்டுமென்று இச்சங்கம் அரசாட்சியாரை வேண்டிக்கொள்ளுகிறது.

4. சுதேச வைத்தியர்களைப் பதிவு செய்வதற்காக நியமிக்கப்பெற்ற பதிவு சபையிலே, தற்போது விலக்கி சமயோசிதமாகவுள்ள வைத்தியர் K. S. பரிபூரணனந்தாவை, உடனே முற்றாக விலக்கி விடுவதோடு, இச் சங்கம் தாம் சிபார்சு செய்யுமொருவரை அந்த இடத்திற்கு நியமிக்க வேண்டுமென அரசாட்சியாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

5. வைத்தியர்களைப் பதிவு செய்யும் பதிவு சபையிலே பதிவு செய்வதற்குச் சென்ற சில தகுதியான வைத்தியர்கள் பதிவு செய்யாது விடப்பெற்றிருக்கிறார்கள். ஆகையால் பதிவு சபையார் இன்னுமோர் முறை பதியப்படாத அவ் வைத்தியர்களை அழைத்து ஆராய்ந்து பார்த்து தகுதியானவர்களைப் பதிவு செய்ய வேண்டுமென இச் சங்கம் பதிவு சபையாரையும் சுகாதார மந்திரி S. W. R. D. பண்டாரநாயகாவையும் கேட்டுக்கொள்ளுகிறது.

6. (A) தற்போது இலங்கை வானொலி நிலையத்திற் சுதேச வைத்திய அபிவிருத்திக்காகப் பிரசாரஞ் செய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும், திரு. K. S. பரிபூரணனந்தா சுதேச வைத்திய அபிவிருத்திக்கும் வைத்தியர்களின் ஒற்றுமைக்கும் பாதகமாக நடந்து கொண்டதால், அவரை மேற்படி நிலைய உபநியாசகராக இருப்பதிலிருந்தும் நீக்கி, அந்த இடத்திற்கு இச்சங்கம் தாம் சிபார்சு செய்யும் ஒருவரை நியமிக்கும்படி தீர்மானிக்கிறது.

6. (B) அரசாங்கத்தாற் தற்போது நிறுவப்பெற்றிருக்கும் "பாமகோப்பியா" சபையிலே திரு. K.S. பரிபூரணனந்தா அங்கம் வகிப்பது சுதேச வைத்திய அபிவிருத்திக்குப் பாதகமாக இருத்தலால், அவரை நீக்கி அத் தானத்தில் இச் சங்கம் சிபார்சுசெய்யுமொருவரை நியமிக்க வேண்டுமெனச் சுதேச வைத்திய அதிகார சபையாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

7. சுதேச வைத்தியர்களுக்கேற்பட்ட இப்பெரும் ஆபத்தான வேளையில் வைத்தியர் S. S. ஆறுமுகம், வைத்தியர் K வீரையா அவர்களும் உறுதியாக நின்று உண்மையை வெளிப்படுத்திய காரணமாக அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. இவ்வழக்கு வைத்தியர்கள் யாவரையும் பாதிக்குமாதலின், இச்சங்கத்தின் வைத்தியர்கள் யாவரும் வேண்டிய பொருளுதவியும் ஊக்கமும் கொடுக்கவேண்டுமென இச்சங்கம் சிபார்சுசெய்கிறது.

8. தனாதிகாரி வைத்தியர் K வேலாயுதம்பிள்ளைக்குச் சங்கத்தின வரவு செலவுக் கணக்கைச் சமர்ப்பிக்கும்படி பல முறை அறிவித்தல் கொடுத்தும் இவர் கணக்குகளைச் சமர்ப்பிக்காதபடியால் அதற்கேற்ற கோட்டு நடவடிக்கைகளை உடனே இச் சங்கம் எடுப்பதற்காக வைத்தியர்களாகிய S. P. அம்பலவாணர், T. இராமலிங்கம், V. கனகசபை, A. S. இராசையா, P. S. துரையப்பா என்னும் ஐவரடங்கிய ஓர் உபசபையை இச் சங்கம் நியமிக்கிறது.

ஏ. சி. இராசையா
மேற்படி சங்ககாரியதரிசி


இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.


## உலகம் பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

சொல்லல் முதலிய பொல்லாத குணங்கள் செயல்கள் கொண்டவளா? அண்ணை,

"மாநிலாந் தலத்தில் வந்நாள்
மருவிநந் துவப்ப ஆட்டும்
நேசமிக்குடையாள் கோங்கன்
நினைந்தகொண் டொழுகுதீராள்
தேசுறுவாய்மை யுளளாள
சினந்திடல் என்றுமில்லாள்
பேசுநின் கற்பு வாய்த்தாள்
பெற்றதே கொண்டுவப்பாள்"

என்ற பாட்டிற்கு எங்கள் வனசா இலக்காயுள்ளள்ல்லவா? அண்ணை, ஆடவர்களாகிய நீங்கள் பெண்களைப்பற்றி அதிகமறிவேம் என்று உங்களளவில் எண்ணிக்கொளளுகிறீர்கள்; அப்படியல்ல, பாம்பின்கால் பாம் பறியும் என்றபடி பெண்களாகிய நாங்களே எங்களுக்கிடையேயுள்ள குற்றங்குறைகளை, நன்மை தீமைகளை, போக்கு வாக்குக்களை உளளபடி யறிதல் முடியுமென்று நினைக்கிறேன்; அல்லாமலும், வனசா எனக்கு மைத்துனிமுறை பூண்டவளானாலும், நான் என் உடற்பிறப்புப் போலவே பாவித்து அவளுடன் ஊடாடி வருகிறேன்; அதிகஞ் சொல்வதென்ன; அவளைப்போல் உத்தமி உங்களுக்கு அகப்படமாட்டாள் அண்ணை" என்று கமலா தன மனத்தில் அபிமானங் கிளரச் சொல்லி முடித்தாள்; அவள சொல் லும்வரை மௌனஞ் சாதித்துக் கொண்டு சிந்தனையில் மூழ்கியவனாயிருந்த பத்மநாதன் கமலாவைப் பார்த்து "தங்காய், வனசாவைப் பற்றி நான் ஏதுங் குற்றஞ்சொல்லி, அந்த ஞாயத்தில் அப்பெண்ணைக் கல்யாணஞ் செய்ய மாட்டேன, வேறொரு பெண்ணைக் கல்யாணஞ் செய்யப்போகின்றேனென்றுசொன்னாற்றான் நீ என்னைக் குறைசொல்லலாம்; எனக்கு இல்லறத்திற் புகுதற்கு இப்பொழுது நோக்கமில்லையென்றுதானே சொல்லுகிறேன்; ..." என்று சொல்லி முடிப்பதற்கிடையிற் கமலா, "இல்லறத்திற் புகுதற்கு இப்பொழுது நோக்கமில்லையானால், வேறு எப்பொழுது அதிற் புகப்போகிறீர்கள்; அதை ஒன்றையும் நீங்கள் சொல்லிவிட்டால் வனசாவும் அவ்வளவு காலமும் காத்துக்கொண்டிருப்பாள். அவள் அப்படி இருப்பாளோ வொழிய, இன்னுமொருவனுக்கு வனசா பெண்டாட்டியாக உடன்படப் போவதில்லை; அவளுடைய மனத்திடத்தை நானறிவேன" என்று அழுத்திச் சொன்னாள் கமலா; அதற்கு உடனே பதில் சொல்ல முடியாதவனாய் இடர்ப்பட்டான பத்மநாதன.

(வரும்)

## இலங்கையரொருவரையே நியமித்தல் வேண்டும்

இப்பொழுது இலங்கைச் சர்வகலாசாலையின் உப அத்தியட்சராகக் கடமை பார்க்கும் ஸேர் ஐவர் ஜென்னிங்ஸ் என்பவருடைய உத்தியோக காலம், வருகிற 52-ம் ஆண்டு யூன் மாசம் 4-ந் தேதியோடு முடியவிருப்பதால், இனிமேல் அந்தப் பதவிக்கு ஒரு இலங்கை மகனையே நியமித்தல் வேண்டுமென, வவனியாப் பகுதிப் பிரதிநிதியாகிய திரு. C சுந்தரலிங்கம் சர்வகலாசாலைச் சங்கத்தில் முன்னறிக்கை செய்துள்ளார்.

## கும்பாபிஷேகம்

வண் - கிழக்குப் பழந்தெருப் பிள்ளையார் கோயிலில், திருப்பணிசெய்தானபின், நேற்று (21-6-51) அதிகாலையில் நிகழ்ந்த புண்ணிய சுப முகூர்த்தத்தில் விநாயகப் பெருமானுக்கும் ஏனைய மூர்த்திகட்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது; அன்று தொடக்கம் 12. தினங்கட்கு விசேட அபிஷேகமும் ஈற்றிற் சங்காபிஷேகம் உற்சவங்களும் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படலாயிற்று.


சபையார்
= ஏழாம் பாலபாடம் =
இப்பாலபாடம் இப்பொழுது அவதாரிகை பரீட்சைவினாக்கள் இலக்கண விளக்கம் வினாக்களென்னுமிவைகள் அநுபந்தமாகச் சேர்த்து வெளியிடப் படலாயிற்று.
விலை சதம் 90
மனேஜர்.


## ●○ வானவில் ○●

○ கலாமந்திரன் ○

● மூத்தல் என்னுமிடத்தில் வசிக்கும் கிறில் தம்மெல் என்னும் 28 வயசுவரையுள்ள கூலிக்காரன், ஜிளாறு என்னும் 25 வயசுவரையுள்ள தன் மனைவியை இருப்புப் பாரையால் அடித்துக் கொன்றானென்னுங் குற்றச்சாட்டில் 1 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றான். மனைவியை இருப்புப் பாரையால் அடித்துக் கொன்றவனுக்கு ஒருவருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமைக்கு நீதியரசர் காரணங் காட்டியுள்ளார்:-

இருவரும் விவாகஞ் செய்தபின் 5 வருட காலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்கு இப்பொழுது மூன்று வயசுப் பிராயமுள்ள ஒரு ஆண் குழந்தையுமுண்டு; தம்மெல் நாடோறும் விடியற்புறம் 5 மணிவரையிற் புறப்பட்டுத் குறித்த இடத்திற்குப் போய் வேலை செய்துவிட்டுப் பொழுதுபடத் தன் வீட்டிற்கு வருவது வழக்கம்: கொலை நடந்ததாகிய அன்று காலையிலும் அப்படியே புலரிக்காலத்தில தம்மெல் வேலைக்குப் புறப்பட்டுப் போனான்; போகும்போது தான் வேலைசெய்யும நேரத்தில மாற்றிக் கட்டிக்கொளளுவதாகிய துணியை அன்று வீட்டில் எடுத்துக்கொண்டு போதற்கு மறந்தமையை இடைவழியில் நினைந்து, உடனே அதனையெடுத்துப் போகும்படி மீண்டு வீட்டிற்கு வந்தான்: வந்தவிடத்தில் தன்மனைவியும் சாடார் என்னும் ஒரு சோரபுருடனும் ஒரே பாயிற் படுத்திருக்கக் கண்டான்; தம்மெலைக் கண்ட மாத்திரத்தே சாடார எழுந்து ஓட்டம் பிடித்தார்; தம்மெல் பைத்தியங் கொண்டான்போல் உடனே பக்கத்திலே ஒரு இரும்புப் பாரை கிடக்கக் கண்டு அதனையெடுத்து அவள் தலையிற் புடைத்த மாத்திரத்தே அவள் உடனே மாண்டாள்; தம்மெல் தன் வீட்டிலிருந்து 16 மைல் தூரத்திலுள்ள புத்தளப் பொலிஸ் தானத்திற்கு நடந்துபோய்த் தான் செய்தவற்றையெல்லாம் உள்ளபடி சொல்லித் தன்னைப் பொலிசரிடம் ஒப்படைத்தான்.

○ தம்மெல தான் செய்தவற்றையெல்லாம உள்ளபடி நீதிஸ்தலத்திலுஞ்சொல்லித் தான் ஆத்திரத்தின் பேரிற் கொலை செய்துவிட்டதாகவும் ஒப்புக்கொண்டான்; யூரிமார் கைபிழைபாட்டுக் கொலை குற்றமென்று நீதியரசருக்குத் தெரிவித்தனர்; இதற்கிடையில் தம்மெல் பொருட்டு ஏற்பட்ட நியாயவாதி, இருவரும்பெற்ற மூன்று வயசு ஆண் குழந்தையொன்றுண்டென்பதையும், அக் குழந்தையின தாய் கொலையுண்டாள், தகப்பன் சிறைவாசஞ் செய்யப்போகிறான்; இப்படியானால் இக்குழந்தையின் கதியென்ன என்றும், பெற்றோர் செய்த பிழைக்காக விரகற்பாத குழந்தையை அநாதப் பிள்ளையாகக் கஷ்டப்படவிடுவது தர்மமல்லவே யென்றும் ஞாயங் காட்டியதனால், நீதியரசர் உவிலவா தம்மெலுக்கு ஒரு வருடக் கடுங்காவல் மாத்திரம் விதித்தாராம்.


L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE
தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## கொழும்பு விவேகானந்த சபை

கொழும்பு விவேகானந்த சபையின் வருடாந்தக் கூட்டம் இந்த யூன் மாதம் 14-ம் திகதி வியாழக்கிழமை மாலை சபை மண்டபத்தில் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. ஆண்டறிக்கையும் கணக்கு விபரமும் சபையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், சில திருத்தப் பிரமாணங்கள் சபையினரால் அங்கீகரிக்கப் பெற்றன. பின்னர் அடுத்த வருட உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது தலைவர்: திரு. கே. ஆழ்வாப்பிள்ளை, காரியதரிசி: திரு. க. சிற்றம்பலம், தனாதிகாரி: திரு. ப. குமாரசுவாமி, வித்தியாலய மனேஜர்: திரு. குல. சபாநாதன், காரிய சபைத் தலைவர்: திரு. எம். கனகசபை, உதவிப் பொதுக் காரியதரிசி: திரு. எஸ். இராஜதுரை, உதவித் தனாதிகாரி: திரு. கு. பொன்னம்பலம், கர்ப்பூரக் காரியதரிசி: திரு க. வைரமுத்து, நிர்வாகக் காரியதரிசி: திரு. வ. பொன்னம்பலம், வித்தியாலயக் காரியதரிசி: திரு. சி. சிவப்பிரகாசம், நூல்நிலையப் பொறுப்பாளர்: திரு. வி குணரத்தினம், அங்கத்தவக் காரியதரிசி: திரு. கெ. தர்மலிங்கம், பரீட்சைக் காரியதரிசி: எஸ். என். சண்முகநாதன் புத்தகசாலைப் பொறுப்பாளர்: திரு சி. விசாகப்பெருமாள் முகாமைச் சபைக்கும் நிர்வாக சபைக்கும் அங்கத்தவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்

—கடித.

## அரசினர் தலையிட வொண்ணாது

சென்ற வியாழக்கிழமை மீசாலை மாவடிப்பிள்ளையார் கோயிற் சந்நிதானத்தில் அவ்வூரிலும் அயலூரிலுமுள்ள சைவமக்கள் ஒரு மகாகூட்டங் கூட்டினர்; மீசாலை இந்து ஆங்கில வித்தியாசாலை உப பிரதமராகிய திரு. எஸ். சே. செல்லையா தலைமை வகித்தார். அக்கூட்டத்தில், அரசினர் எக்காரணம் பற்றியும் இந்துக் கோயிற் பரிபாலன விஷயத்திலே தலையிட வொண்ணாதென ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

— கடித

## சைவப்பிரசங்கம்

சென்ற சனிக்கிழமை 23-6-51 இரவு 7 மணியளவில் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க மண்டபத்தில், திரு. பொ. அப்புக்குட்டி "கடவுள் வழிபாடு" என்னும் பொருள் பற்றியும் திரு சி. நாகையா B. A. "தற்காலச் சைவசமய நிலை" என்னும் பொருள் பற்றியும் பிரசங்கஞ் செய்தார்கள். சிலர் குறிப்புரையுங் கூறினார்கள்.

## வாவியிற் பெண்ணின் பிரேதம் மிதந்தல்

மொறட்டுவாவுக் கணித்தான பேல்கொடை வாவியில், ஒரு இளம் பெண்ணின் பிரேதம் மிதந்து வரக் கண்டு மொறட்டுவைப் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டதாம், விசாரணைப்போது, அது டெஹிவலையில் வசித்த பேர்ள் அப்போகு என்னும் பெண்ணின் பிரேதமெனவும், அவளுடைய கணவன் அவளை ஒரு ஆண்டிற்குமுன் வெறுத்துப் பிரிந்துவிட்டமையினால், அவள் நீரில் மூழ்கித் தற்கொலைசெய்திருக்க வேண்டுமென்று யூகிக்கப்பட்டதாம்.

# மகளிர் மன்றம்

## இல்லாளும் இல்லமும்

III

மேற்கூறியவற்றால் இல்லாள் தன் கணவனுக்கு எங்ஙனம் இன்றியமையாதவளாக விருக்கிறாளென்பது புலனாகிறது. இப்பகுதியில் அவள் தன் குழந்தைகளுக்கும் சுற்றத்தவர்களுக்கும் எவ்வண்ணம் உதவுகின்றாள் என்பதனை ஆராய்வாம்.

மக்களைத் தொட்டிலில் இட்டு ஆட்டி அவர்களை வளர்த்தெடுக்குந் தாய்மார்களே உலகத்தை உருவாக்குபவர்கள். ஒரு குழந்தை தன் தாயினிடமிருந்தே பலவற்றையுங் கற்றுக்கொள்கிறது. குழந்தையின் உடலின் வளர்ச்சிக்கும் மானத வளர்ச்சிக்கும் தாயே பொறுப்புடையவளாக விருக்கிறாள். குழந்தை பிறந்தது ஐந்து வயதாகும் வரையில் அதன் வளர்ச்சிப் பருவம் முக்கியமானதென்று அகநூலறிஞர் கூறுவர். இப்பருவத்தில் குழந்தை சீரிய முறையில் வளர்க்கப்பட்டால் அவர்கள் நற்பண்புடைய பிரசைகளாக வருவார்கள். இப் பருவ வளர்ச்சி சீரியதாக விராவிட்டால் அவர்களுடைய வாழ்வு முழுவதும் சீரியதாக விருக்கமாட்டாது. இதனைக் குறித்தே 'ஐந்தில் வளையாதது ஐம்பதிலும் வளையாது' 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்று கூறுவார்கள். இதனால் மக்களை வளர்த்தெடுப்பதில் தாயின் பொறுப்பு எவ்வளவென்பது தெள்ளிதிற் புலனாகின்றது. இத்தகைய பொறுப்பை யேற்ற தாய்மையின் பெருமையைப் பார்ப்போம்.

குழந்தைகளுக்கு வேண்டிய நேரத்தில் தேவையை அறிந்து குறிப்பையறிந்து ஏற்றபெற்றி உணவளிப்பவள் தாயே. அவர்களைச் சீராட்டிப் பாலூட்டி வளர்ப்பவளும் அவளே. உணவு கொடுப்பதும் வளர்ப்பதும் மற்றவர்களினால் செய்யக்கூடிய கருமங்கள். ஒரு தாய் அன்புடனும் கவனத்துடனும் செய்வதுபோன்று மற்றவர்களினாற் செய்ய முடியாது.

ஒரு குழந்தைக்கு அதன் தாயே முதலாசிரியையாக விருக்கிறாள். தாயினிடமிருந்தே குழந்தை பலவற்றையுங் கற்கின்றது. நோய்வாய்ப்பட்ட நேரத்தில் அக்குழந்தைக்கு வைத்தியருந் தாயே. குழந்தைகள் பிறருடைய அன்பையும் ஆதரவையும் வேண்டி நிற்கின்றார்கள். அவ்வன்பெல்லாவற்றையும் அள்ளிக் கொடுத்து குழந்தையை வளர்ப்பவள் தாயே. குழந்தைகள் தாம் மனம்வருந்திய காலத்திலோ மனம் முரண்பாடடைந்த காலத்திலோ தாயினிடமிருந்தே புத்திமதி கேட்கின்றார்கள். சுருக்கக் கூறின் குழந்தையின் வாழ்க்கை யூற்றாக அமைகின்றாள் தாய்.

குழந்தைகள் வளர்ந்து பாடசாலைக்குச் செல்லுங் காலத்திலுந் தாயே இயக்குங் கருவியாக விருக்கிறாள். பிள்ளைகளின் விருப்பு வெறுப்பறிந்து வேண்டியன செய்யவும் அவர்களுக்கு ஏற்ற புத்திகளை யன்புடன் கூறவும் அவர்களுடைய உடல் வளர்ச்சியையும் மனவளர்ச்சியையும் கவனத்துடன் பேணவும் அவளுக்கு இருக்கும் சக்தியைப்போன்று வேறு எவருக்கும் இராது. பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களானபோதுங்கூடத் தாயே அவர்களுக்கு அன்பினதும் ஆதரவினதும் நிலைக்களனாக விருக்கின்றாள்.

நெப்போலியன் முதலிய வீரர்களும், சுவாமி விவேகானந்தர் மகாத்மா காந்தியடிகள் முதலிய பெரியோர்களும் தம் தாய்மார்களையே தமக்கு அறிவூட்டுங் கோலாகவும் வீரமும் மனவுறுதியுங் கொடுக்கும் ஊற்றாகவும் வைத்துப் போற்றினர். பண்டைத் தமிழ்நாட்டுப் பெண்கள் வீரத்தைத் தம் மக்களுக்கு ஊட்டியதோடன்றி சான்றாண்மையையுங்கூட ஊட்டினார்கள்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்று கூறினர் திருவள்ளுவநாயனார். தன் மகனைச் சான்றோனென்று பலராலும் கூறக்கேட்ட தாய் அவனைப் பெற்றெடுத்த காலத்தில் அடைந்த இன்பத்தைக் காட்டிலும் மேலான இன்பத்தை அடைவாள். ஏனெனில் தன் மகனைச் சான்றோனாக்குவதே அவள் குறிக்கோள். இங்ஙனம் ஒவ்வொரு தாயும் மகனைச் சான்றோனாக்கும் குறிக்கோளை மேற்கொண்டால் உலக மக்கள் அனைவருமே சான்றோராக விருப்பார்கள்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை" யென்று தமிழ் வேதங் கூறுகின்றது. இல்வாழ்வார் மூவர்க்கும் நல்லாற்றின் நின்று துணைபுரிவதற்கு இல்லாள் இன்றியமையாதவளாக விருக்கிறாள். இரந்து வருவோர்க்கு உணவு கொடுத்து அறம் வளர்த்தலும் சுற்றத்தவர்களைப் பேணி அவர்களை ஆதரிப்பதும் இல்லாளின் கடமைகளாகின்றன. இல்லாள் நல்லவளாக விருப்பின் சுற்றத்தவர்களும் அவள் வீட்டை நாடிவருவர். அவள் சுற்றம் பேணாதவளாகவிருப்பின் சுற்றத்தவர்கள் அவளில்லத்திற்கு அருகிலும் போகார். இதிலிருந்து ஒரு இல்லாள் சுற்றத்திற்கு எங்ஙனம் உதவுகிறாளென்பது புலனாகின்றது.

இல்லிற்கு ஒளியைத் தருபவள் இல்லாள். இல்லில் இருந்து அவள் ஆற்றுங் கருமங்கள் பல. அவளே இல்லிற்கு உயிர்நாடியாக விருக்கின்றாள். அவள் இன்றேல் இல்லம் இல்லை. அவள் இருக்குமிடத்தில் இல்லம் இருக்கின்றது. இதை யுணர்ந்தே பண்டைப்புலவர் "மடக்கொடியில்லா மனைபாழ்" என்று கூறிப்போந்தனர்.

## ரேடியோ

திருச்சி புதன் ஜூன் 27

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 சிதம்பரம் எம் கனகசபை பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்திற்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 ஆரம்பம்* 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 கே என் ராதாகிருஷ்ணநாயுடு கிளாரினெட் * 2 தமிழில்செய்தி 2 10 சிதம்பரம் எம் கனகசபை பிள்ளை பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 வேதாரண்யம் எம் கனகாம்புஜம் புல்லாங்குழல் 5 45 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள்கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்செல்வம் ஆ இ ரே வித்வான்கள் 7 45 மாகாணமுன்னேற்றம பேச்சு 8 பஞ்சவர்ணம் தொடர்கதை 8 15 வேதாரண்யம் எம் கனகாம்புஜம் புல்லாங்குழல் 8 30 இசை வேலை * 8 45 ஆங்கிலப்பேச்சு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 மைலம் பி வஜ்ரவேலு முதலியார் பாட்டு 10 முடிவு.

திருச்சி வியாழன் ஜூன் 28

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 யாழ்ப்பாணம் எஸ் பி தில்லைராஜன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 காலைஇசை* 8 30 முடிவு.

1 குரல்வகை* 1 15 பெண்ணுலகம் 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 எம். எஸ். சுப்புலக்ஷ்மி 2 தமிழில் செய்தி 2 10 யாழ்ப்பாணம் எஸ் பி தில்லைராஜன்பாட்டு 2 45 முடிவு

மாலை 5 30 ஜலதரங்கம் ஆ இ ரே வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்திற்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 காவடிச்சிந்து ஆ இ ரே வித்துவான்கள் 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 8 எனக்குப் பிடித்த கவிஞர் பேச்சு 8 75 ராகம், பல்லவி திருவாவடுதுறை என் ராஜரத்னம்பிள்ளை நாகஸ்வரம் டி எ கணேச பிள்ளை தவில் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 சாவித்திரி கணேசன் பாட்டு 10 முடிவு.

திருச்சி வெள்ளி ஜூன் 29

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 ஸ்ரீரங்கம் வி எஸ் கிருஷ்ணமூர்த்தி ராவ் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 ஆரம்பம் 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 அலமேலு மங்காள் * 2 தமிழில்செய்தி 2 10 சாரதா கணேசன் வீணை 2 45 முடிவு.

மாலை 5 30 சுவாமிமலை பி பி சுந்தரசாமி பிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள்கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 நின்ற தர்மம் நாடகம் 7 45 சமுதாயப்பெட்டி 8 ஸ்ரீரங்கம் வி எஸ் கிருஷ்ணமூர்த்திராவ் பாட்டு 8 30 குரல்வகை *9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 சுவாமிமலை பி. பி. சுந்தரசாமிபிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.

வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

திறமான தேக்கமரங்கள்

பல நீளங்களிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி ரோட்

யாழ்ப்பாணம்

Std 2

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai, Jaffna, on Tuesday June 26, 1951